# 10 திருமுறைகளைப் பக்தியுடன் ஓதுவோம்

சிவபெருமான் சைவ நாயன்மாராகிய சற்குரு மூர்த்தம் கொண்டு அருளிச் செய்தவை திருமுறைகளாகும். திருமுறைகள் இறைவனின் திருவாக்கு. அவை தெய்வீகமானவை அதனால் திருமுறைகளை திருமுறைத் தமிழ் எனப் போற்றுவர்.

திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாரின் திருவருளைப் பெற்ற நம்பியாண்டார் நம்பிகள் தில்லைச் சிற்றம்பலத்தில் கிடைத்த மூவர் தேவாரங்களையும் திருமுறைகளாக வகுத்தார். அவ்வாறு வகுத்த பின்னர் அப்போது இருந்த ஏனைய அருட்பாக்களை சேர்த்து திருமுறைகளைப் பதினொன்றாக்கினார். அவரைத் திருமுறைகளை வகுக்கும் பணிகளில் ஈடுபடச் செய்தவன் முதலாம் இராசராஜ சோழன் ஆவான், அவனுக்குத் திருமுறை கண்ட சோழன் எனவும் பெயருண்டு. அந்த மன்னனின் வேண்டுகோளின்படி நம்பியாண்டார் நம்பி இயற்றிய நூல்களும் பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டன.

| திருமுறை | நூற் பெயர் | அருளிய ஆசிரியர் |
|---|---|---|
| 1, 2, 3 | தேவாரம் | சம்பந்தர் |
| 4, 5, 6 | தேவாரம் | அப்பர் |
| 7 | தேவாரம் | சுந்தரர் |
| 8 | திருவாசகம்<br>திருக்கோவையார் | மாணிக்கவாசகர் |
| 9 | திருவிசைப்பா<br><br>திருப்பல்லாண்டு | சேந்தனார், கருவூர்த்தேவர்<br>பூந்துருத்தி நம்பிகாட நம்பி<br>கண்டராதித்தர், வேணாட்டடிகள்<br>திருவாலியமுதனார்,புருடோத்தம நம்பி<br>சேதிராயர், திருமூலர்,<br><br>சேந்தனார் |
| 10 | திருமந்திரம் | திருமூலர் |
| 11 | 40 பிரபந்தங்கள் | திருவாலவாயுடையார்,காரைக்காலம்மையார்<br>ஐயடிகள்காடவர்கோன்,சேரமான்பெருமாள்<br>நக்கீர தேவர், கல்லாட தேவநாயனார்,<br>பரணதேவ நாயனார், இளம்பெருமானடிகள்<br>அதிராவடிகள், திருவெண்காட்டடிகள்<br>நம்பியாண்டார் நம்பி |
| 12 | சேக்கிழார் | திருத்தொண்டர் புராணம்<br>(பெரிய புராணம்) |



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

பின்னர் அநபாயச் சோழன் எனவும், இரண்டாம் குலோத்துங்கன் எனவும் பெயர் பெற்ற சோழப்பேரரசனின் அவைக்களத்திலே, முதன் மந்திரியாக இருந்த சேக்கிழார் சுவாமிகள் பாடியருளிய பெரிய புராணத்தை சைவப் பெரியோர் பன்னிரண்டாம் திருமுறையாக வகுத்தனர்.

புதிய பக்தி இறைவழிபாட்டின் போதும், சைவசமய நிகழ்ச்சிகளின் போதும் திருமுறைகள் ஓதப்பட வேண்டும் என்பது சைவமரபு. அத்தகைய சந்தர்ப்பங்களில் முதலிலும் முடிவிலும் திருச்சிற்றம்பலம் சொல்லுதல் வேண்டும். திருறைகளைப் பேணிய பெருமை சிதம்பரத்துக்கே உரியது. அங்குள்ள இறைவனையும் ஆலயத்தையும் போற்றும் வகையில் பன்னிரு திருமுறைகளையும் பாட முன்பும், பாடிய பின்னும் திருச்சிற்றம்பலம் சொல்லுவர். திருச்சிற்றம்பலம் என்பது நடராஜப் பெருமான் திருநடனம் புரியும் சிதம்பரத்தைக் குறிக்கும். அவர் எங்கும் நிறைந்தவர். எனவே, எங்கும் நிறைந்த சிவனைப் போற்றும் போது 'திருச்சிற்றம்பலம்' சொல்லிப் பாட வேண்டும். இதுவும் திருச்சிற்றம்பலம் சொல்வதற்கான காரணமாகும்.

திருமுறைகளை ஓதும் சந்தர்ப்பங்களில், பன்னிரு திருமுறைகளுக்கும் பதிலாக பஞ்சபுராணம் ஓதலாம். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்) என்ற வரிசைக் கிரமத்தில் பஞ்சபுராணங்கள் ஓதப்பட வேண்டும்.

பேரருளாளர்களான சிவனடியார்கள் சிவன் அருளால் பெற்ற பேரின்பத்தின் பயனை, பொது மக்கள் அனைவருமே பெற வேண்டும் என நினைத்தனர். அப்பெரு விருப்பால் பாடியருளிய தோத்திரப் பாடல்களின் தொகுப்பே திருமுறைகள் ஆகும். திருமுறைகளைத் **'தமிழ்வேதம்'** எனவும் '**தமிழ் மறை**' எனவும் போற்றுவர்.

பாடநூலில் தரப்பட்டுள்ள திருமுறைகளை வேண்டும் போதெல்லாம் ஓத வேண்டும். பொருள் விளங்க, பண்ணுடன் இசையுடனும் பக்தி உணர்வுடனும் ஓதி வர உள்ளம் தூய்மை அடையும், இடர் வராது, இறையருள் கிடைக்கும். இவ்வகையில் சைவசமயத்தவருக்கு முத்திக்கு வழிகாட்டும் பொதுநூலாக அமைபவை திருமுறைகளே ஆகும்.

## அ. தேவாரங்கள்

தேவ + ஆரம் எனப் பிரிந்து, தேவ என்பது தெய்வம் எனவும் ஆரம் என்பது மாலை எனவும் பொருள் தரும். அதாவது தெய்வத்திற்குச் சூட்டப்படும் பாமாலை **தேவாரம்** ஆகும். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் மூவராலும் சிவபெருமான் மீது அருளிச் செய்யப்பட்ட திருப்பாடல்கள் **தேவாரம்** என்னும் பெயரால் வழங்கப்படும். தேவாரங்கள் என அழைக்கப்படும் முதல் ஏழு திருமுறைகளையும் '**அடங்கன் முறை**' என வழங்குவர்.

திருஞானசம்பந்தர் பாடியருளிய தேவாரங்கள் முதல் மூன்று திருமுறைகளாகும். அப்பர் பாடியருளிய தேவாரங்கள் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாகும். சுந்தரர் பாடியருளிய தேவாரங்கள் ஏழாம் திருமுறையாகும். நாயன்மார் மூவரும் பாடியருளியவை தேவாரங்கள் என்பதனால் அவர்கள் ''தேவார முதலிகள்'' எனப் போற்றப்படுவர்.

**தேவாரங்கள் பல்வேறு சிறப்புகளைக் கொண்டவை.**

- பன்னிரு திருமுறைகளுக்கும் முதன்மையானவையாக தேவாரத் திருமுறைகள் அமைவன.
- பஞ்சபுராணம் பாடும்போது முதலில் பாடப்படுவது தேவாரங்களே. அவை பண், பலம், தவம், ஞானம் என்பன செறிந்தன.
- இறைவனுக்கு மாலையாக அமைபவை.
- இறைவனது திருவருள் அற்புதங்கள் நிறைந்தவை
- அவா, வெகுளி என்பவற்றைப் போக்கி, தூய உள்ளத்தைக் தருவன.
- இறைவனிடம் பக்தியை ஏற்படுத்துவன.
- ஞானத்தைத் தந்து முத்திக்கு வழிகாட்டுவன.

இந்தப் பாடத்தில் தேவார முதலிகளான மூவரும் பாடிய நமசிவாய என்ற பஞ்சாட்சர மந்திரத்துடன் தொடர்புடைய தேவாரங்களையும், ஏனைய தேவாரங்களையும் கற்போம். இது உங்களுக்குக் கிடைத்திருக்கும் பெரும்பேறாகும்.

## மூன்றாந் திருமுறை

### (i) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

**பாடல் 1**

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் உபநயனம் பெற்றார். அப்பொழுது திருவைந்தெழுத்தின் மகிமையைத் தெரிவித்து இத்தேவாரத் (திருப்பதிகத்தை) பாடியருளினார். இத்தேவாரம் உள்ளடங்கும் திருப்பதிகம் பஞ்சாட்சரத்தின் உண்மையையும், மகிமையையும் கூறுவதால் **பஞ்சாட்சரத் திருப்பதிகம்** எனப்படும். இத்திருப்பதிகத்தின் முதலாவது தேவாரப்பாடல் ‘‘துஞ்சலும் துஞ்சலிலாத...’’ என்பதாகும். அதனை இங்கு கற்போம்.

**தலம்** - பொது **பண்** : காந்தார பஞ்சமம்

**திருச்சிற்றம்பலம்**

துஞ்சலும் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே

**திருச்சிற்றம்பலம்**

**பதவுரை**

துஞ்சலும் - உறங்கும் பொழுதும், துஞ்சல் இல்லாத போழ்தினும் - விழித்திருக்கும் பொழுதும்; நெஞ்சகம் நைந்து மனங் கசிந்து; நினைமின் நாள் தொறும் - நமச்சிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை நாள்தோறும் மனத்தில் நினையுங்கள்; வஞ்சகம் அற்று அடி வாழ்த்த மனத்தில் வஞ்சகம் இல்லாது சிவலிங்கத்தைப் பூசித்து சிவன் திருவடியைப் போற்ற; வந்த கூற்று - மார்க்கண்டேயேரின் உயிரைக் கவர்வதற்காக வந்த காலன் (யமன்); அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே - பயப்படும்படியாக அவனை உதைப்பித்து, மார்க்கண்டேயரைக் காத்தவை **நமசிவாய** என்ற ஐந்தெழுத்து மந்திரமாகும்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

**பொழிப்புரை**

மனத்தில் வஞ்சகம் இல்லாது, சிவலிங்கப் பெருமானைப் பூசித்து, திருவடியை போற்றிய மார்க்கண்டேயருக்காக, அவருடைய உயிரைக் கவர்வதற்காக வந்த காலன் (யமன்) அச்சமடையும் வண்ணம் அவனை உதைப்பித்து, மார்க்கண்டேயரைக் காத்தது நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரம் ஆகும். ஆதலால், உறங்கும்போதும், விழித்திருக்கும் போதும் மனங்கசிந்து நமசிவாய மந்திரத்தை நாள்தோறும் மனத்தில் நினையுங்கள்.

## மூன்றாம் திருமுறை

**பாடல் 2**

**நமச்சிவாயத் திருப்பதிகம்**

சம்பந்தப் பெருமான் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு சீர்காழித் தலத்தை அடைந்தார். அச்சமயத்தில் பெற்றோரின் விருப்பப்படி திருநல்லூர்ப் பெருமணம் என்னுமிடத்தில் அவருக்குத் திருமணம் நடைபெற்றது. அவ்வேளை சம்பந்தப் பெருமான் திருநல்லூர்ப் பெருமண ஊரில் எழுந்தருளியுள்ள சிவ பெருமானை வணங்கினார். ''ஞான மெய்ந்நெறிதான் யார்க்கும் நமசிவாயச் சொல்லாம்" என்பதனை உலகினருக்கு விளக்கும் வகையில் ''காதலாகி ....'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். இப்பதிகத்தை நமச்சிவாயத் திருப்பதிகம் எனப் போற்றுவர். இப்பாடத்திலுள்ள தேவாரத்தைப் பக்தியுடன், ஓதி இறைவனை வழிபடுவோம்.

**தலம் :- திருநல்லூர்ப்பெருமணம் பண் - கௌசிகம்**

**திருச்சிற்றப்பலம்**

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

**திருச்சிற்றம்பலம்**

**பதவுரை**

காதலாகி - மிகுந்த அன்புடன்; கசிந்து கண்ணீர் மல்கி - மனம் கசிந்துருகி கண்ணீர் பெருக; ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்விப்பது - நமசிவாய என்ற திருவைந்தெழுத்தை ஓதுபவர்களை அம்மந்திரம் நன்னெறிக்கு உய்த்து அருளும் சிறப்புடையது; வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது - நால்வேதங்களதும் உண்மைப் பொருளாக உள்ளது; நாதன் நாமம் நமச்சிவாயவே - சிவ நாமமான நமசிவாய என்ற மந்திரமாகும்.

**பொழிப்புரை**

சிவ நாமமான நமசிவாய என்ற மந்திரம் நால் வேதங்களதும் உண்மையைப் பொருளாக உள்ளது. மனம் கசிந்துருகி, கண்ணீர் பெருக, மிகுந்த அன்புடன் 'நமசிவாய' என்ற திருவைந்தெழுத்தை ஓதுபவர்களை நன்னெறிக்கு உய்த்து அருளும் சிறப்புடையது சிவபெருமானின் 'நமசிவாய' என்னும் திருவைந்தெழுத்து (ஸ்ரீபஞ்சாட்சரம்) ஆகும்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

**விளக்கவுரை**

இந்த நமச்சிவாயப் பதிகம் முழுவதையும் பாராயணம் செய்தால் மனக் கவலை மாறும். நமசிவாய மந்திரம் முத்திக்கு வழிவகுக்கும். ஆதலால் நாமும் ஓதி, பயன் பெறுவோம்.

## நான்காம் திருமுறை

## (ii) திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

**பாடல் 1**

**நமச்சிவாயத் திருப்பதிகம்**

திருநாவுக்கரசு நாயனார் சமண சமயத்தை விட்டுச் சைவ சமயத்தைச் சேர்ந்தார். அதனைப் பல்லவ அரசன் அறிந்தான். சமணர்களது வேண்டுகோளின்படி நாவுக்கரசு நாயனாரை ஒரு கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலிலே தள்ளிவிடுமாறு பல்லவ அரசன் கட்டளையிட்டான். அரசனின் கட்டளையை ஏவலாளர் நிறைவேற்றினர். அப்போது நாயனார் சிவபெருமானைத் துதித்து **''சொற்றுணை வேதியன்''** என்று தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே கயிறு அறுந்தது; கல் தெப்பம் போல மிதந்தது. நாயனார் அக்கல்லையே தெப்பமாகக் கொண்டு திருப்பாதிரிப் புலியூரை அடைந்தார். **''இல்லக விளக்கது..''** என்ற தேவாரம் நமச்சிவாயத் திருப்பதிகத்தில் உள்ள எட்டாவது பாடலாகும். வீடுகளில் விளக்கேற்றும் போது இத்தேவாரத்தைப் பாட, இல்லத்தில் ஒளி வீசும்.

**தலம்** பொது **பண்** - காந்தார பஞ்சமம்

**திருச்சிற்றம்பலம்**

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே

**திருச்சிற்றம்பலம்**

**பதவுரை**

இல்லக விளக்கது - வீட்டினுள் ஏற்படும் விளக்கானது; இருள் கெடுப்பது - அங்குள்ள இருளைப் போக்க வல்லது; சொல் அக விளக்கது - (அவ்வாறே) அறிஞர்களால் பேசப்பெறும் மெய்ம் மொழிகளானவை; சோதி உள்ளது - சிவஞானமாகிய பிரகாசத்தை உடையது; பல்லக விளக்கது - பல இடங்களில் தோன்றும் சூரியன், சந்திரன், அக்கினி என்னும் விளக்கு எனப்படுவை; பலருங் காண்பது - உலகில் உள்ள எல்லோராலும் பார்க்கக்கூடியன; நல் அக விளக்கது - உள்ளத்திற்கு ஒளியைத் தருகின்ற நல்ல விளக்காக அமைவது; நமச்சிவாயவே - ந, ம, சி, வா, ய என்னும் திருவைந்தெழுத்துக்களாகும்.

**பொழிப்புரை**

வீட்டினுள் ஏற்றப்படும் விளக்கானது அங்குள்ள புற இருளைப் போக்கவல்லது. அவ்வாறே, அறிஞர்களால் பேசப்பெறும் மெய்ம் மொழிகள் சிவஞானமாகிய பிரகாசத்தை உடையன. சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களும் உலகிலுள்ள மக்கள் யாவராலும் பார்க்கக் கூடியன. தூய மனத்தின்கண் நல்ல விளக்காக அமைவது ந, ம, சி, வா, ய என்னும் திருவைந்தெழுத்தாகும்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

**விளக்கவுரை**

அகத்திருளை நீக்கும் அகவிளக்கு என்றும், சொல்லின் கண் விளங்கும் சோதிவிளக்கு என்றும், எண்ணில்லாத உயிர்களின் உள்ளந்தோறும் ஒளி பெருக்கும் விளக்கு என்றும் அறிவிற்கு அறிவாய் விளங்கும் நல்லக விளக்கு என்றும் திருவைந்தெழுத்தை இனிய உவமைகளால் விளக்குவது இத்திருப்பாடல்.

## ஆறாம் திருமுறை

**பாடல் 2**

**திருத்தாண்டகம்**

திருநாவுக்கரசு நாயனார் **''தாண்டகம்''** என்னும் ஒரு வகைப் பாடலையும் பாடியுள்ளார். அதனால் அவரைத் **தாண்டக வேந்தர்** என்ற சிறப்புப் பெயரால் போற்றுவர். அவர் பாடிய திருத்தாண்டகங்கள் ஆறாம் திருமுறையுள் அடங்கும். அதனால், ஏனைய தேவாரத் திருமுறையிலிருந்து இத்திருமுறை தனிச் சிறப்புப் பெறுகின்றது. நாவுக்கரசர் தாண்டகப் பாடல்களை பொதுவாகவும், தலச் சார்பாகவும் பாடியுள்ளார். கீழ்வரும் திருத்தாண்டகம் திருவையாற்றுத் தலம் மீது பாடப்பட்டதாகும்.

திருநாவுக்கரசர் திருவையாற்றில் கைலைக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தார்; அக்காட்சி மறைந்தபின் வருந்தி, பின் தெளிந்து தாம் கண்ட காட்சியைத் திருப்பதிகங்களாகப் பாடினார். அங்கு அவர் தங்கியிருந்தபோது பாடியருளியவற்றில் இத்திருப்பதிகமும் ஒன்றாகும். '**ஓசை ஒலியெலாம்...**'' என்ற திருத்தாண்டகம் திருவையாற்றுத் திருப்பதிகத்தின் முதலாவது பாடலாகும்.

**தலம் : திருவையாறு**

**திருச்சிற்றம்பலம்**

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி

**திருச்சிற்றம்பலம்**

**பதவுரை**

ஓசை ஒலி எல்லாம் ஆனாய் நீயே - ஓசையும், அதிலிருந்து பிறக்கும் எல்லா ஒலிகளுமாய் உள்ளவன் நீயே; உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே - உலகத்திற்கு ஒப்பற்ற தலைவனாய் உள்ளவன் நீயே; வாச மலர் எல்லாம் ஆனாய் நீயே - மணம் கமழும் எல்லா மலர்களாயும் உள்ளவன் நீயே; மலையான் மருகனாய் நின்றாய் நீயே; - மலையரசனுக்கு மருமகனாக வந்தவனும் நீயே; பேசப் பெரிதும் இனியாய் நீயே - போற்றிப் புகழ்வதற்கு மிகவும் இனியவனாக இருப்பவனும் நீயே; பிரானாய் அடி என் மேல் வைத்தாய் நீயே - எனக்குக் குருநாதராய், என் தலைமேல் உன் திருவடியை வைத்து அருள் செய்தவனும் நீயே; தேச விளக்கு எல்லாம் ஆனாய் நீயே - உலகை விளக்கும் சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடராய்

உள்ளவனும் நீயே; திருவையாறு அகலாத செம்பொற் சோதி - திருவையாறு என்னும் தலத்தினை விட்டகலாத செம்பொன் போலச் சுடரும் சோதியே.

### பொழிப்புரை

திருவையாறு என்னும் தலத்தினை விட்டகலாத செம்பொன் போலச் சுடரும் சோதி வடிவான இறைவனே, ஓசையாகவும் அதிலிருந்து பிறக்கின்ற எல்லா ஒலிகளுமாய் உள்ளவன் நீயே. இந்த உலகத்திற்கு ஒப்பற்ற தலைவனாய் உள்ளவனும் நீயே. மணங் கமழும் எல்லா மலர்களாகவும் உள்ளவனும் நீயே. மலையரசனுக்கு மருமகனாக வந்தவனும் நீயே. எனக்குக் குருநாதராய் வந்து என் தலைமேல் திருவடியை வைத்து அருள் செய்தவனும் நீயே. உலகை விளக்கும் சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடராய் உள்ளவனும் நீயே.

### விளக்கவுரை

இத்திருப்பதிகம், இறைவனது அருட்குணம், அருட் செயல் என்பவற்றை வகுத்து எடுத்துப் பல தொடர்கோவையாக, முன்னிலை வகையால் விதந்து அருளிச் செய்தது.

## ஏழாந் திருமுறை

### iii சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

**பாடல் 1**

சுந்தரமூர்த்தி நாயனார், சங்கிலியாரைத் திருமணம் செய்த பின்னர் திருவொற்றியூரில் வாழ்ந்து வந்தார். அவ்வேளை, அவருக்குத் திருவாரூர் வீதிவிடங்கப் பெருமானது வசந்த விழா நினைவுக்கு வந்தது. அதனால் பெருமானை நினைத்து பாடியருளியது திருவாரூர்த் திருப்பதிகம் ஆகும். ‘‘**பத்திமையும் அடிமையும்....**’’ எனத் தொடங்கும் திருவாரூர்த் திருப்பதிகத்தின், பத்தாவது பாடல் ‘‘**ஏழிசையாய்**..’’ எனத் தொடங்கும் தேவாரம் ஆகும். அத்தேவாரத்தைப் பக்தியோடும் பண்ணோடும் பாடிப் பயனடைவோம்.

**தலம் : திருவாரூர்** **பண் : பழம் பஞ்சுரம்**

**திருச்சிற்றம்பலம்**

ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாலையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரித்திருக்கேன் என்ஆரூர் இறைவனே.

**திருச்சிற்றம்பலம்**

**இறைவன் - வன்மீகநாதர்**
**இறைவி - கமலாம்பிகை**

### பதவுரை

ஏழிசையாய் இசைப்பயனாய் - ஏழு சுரங்களாலான இசையாகவும், அந்த இசையின் பயனான இன்பமாகவும்; இன்னமுதாய் - இனிமையான அமுதாகவும்; என்னுடைய தோழனுமாய் - எனக்கு நல்லவற்றை செய்கின்ற நண்பனாகவும், யான் செய்யும் துரிசுகளுக்கு உடனாகி - நான் செய்யும் குறும்புகளுக்கு உடன் இருந்து உதவுபவனாகவும்; மாலை யொண்கண் பரவையைத் தந்து ஆண்டானை ஒளி



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

பொருந்திய அழகிய கண்களை உடைய பரவையாரை எனது மனையாளாக தந்து என்னை ஆட்கொண்டவராகவும் விளங்கும்; ஏழையேன் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனே - திருவாரூர்ப் பெருமானே அறிவில்லாத, ஏழை அடியேன் எவ்வாறு பிரிந்திருப்பேன்.

### பொழிப்புரை

ஏழு சுரங்களாலான இசையாகவும், அந்த இசையின் பயனான இன்பமாகவும், இனிமையான அமுதமாகவும் எனக்கு நல்லது செய்யும் நண்பனாகவும், நண்பனாய் நான் செய்யும் குறும்புகளுக்கு உடன் இருந்து உதவுபவனாகவும், ஒளி பொருந்திய அழகிய கண்களையுடைய பரவையாரை எனது மனையாளாகத் தந்தவராகவும் விளங்கும் திருவாரூர்ப் பெருமானை அறிவில்லாத, ஏழை அடியேன் எவ்வாறு பிரிந்திருப்பேன். பிரிந்திலேன், விரைந்து சென்று அப்பெருமானை வணங்குவேன்.

## ஏழாந் திருமுறை

**பாடல் 2**

**திருப்பதிக வரலாறு**

சுந்தரர் திருப்பாண்டிக்கொடு முடி திருஈங்கோய் மலை முதலான பல தலங்களையும் வணங்கி கொங்கு நாட்டில் காவிரியின் தென் பகுதியில் கரையூரிலுள்ள **திருப்பாண்டிக் கொடுமுடி** என்னும் கோயிலை வந்தடைந்தார். பின் அங்கே சென்று இங்குள்ளவர் தம்மை மறக்க ஒண்ணாது என்று நினைத்து, திருவைந்தெழுத்தை அமைத்துப் பாடி அருளியது, திருப்பாண்டிக்கொடுமுடிப் பதிகம் ஆகும். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் **சொல்லுநா நமச்சிவாயவே** என்று அருளி இருப்பதால், இதனை **நமச்சிவாயத் திருப்பதிகம்** என்ற பெயரால் போற்றுவர். ‘செம்பொனேர் சடை..’ என்ற தேவாரம் இப்பதிகத்தின் எட்டாவது பாடலாகும். இந்த தேவாரத்தை கற்று நமசிவாய மந்திரத்தை நாளும் ஓதி நலம் பெறுவோம்.

**தலம் : திருப்பாண்டிக்கொடு முடி** **பண் : பழம் பஞ்சுரம்**

**திருச்சிற்றம்பலம்**

செம்பொ னேர்சடை யாய்தி ரிபுரந்
தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாக
மர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயில்
ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேயுனை நான்ம றக்கினுஞ்
சொல்லும் நா நமச்சி வாயவே.

**திருச்சிற்றம்பலம்**

**இறைவன் - கொடுமுடி நாதர்**
**இறைவி - பண்மொழியம்மை**

## பதவுரை

செம்பொன்னேர் சடையாய் - செம்பொன்னை ஒத்த சடையை உடையவனே; தீ எழச் சிலை கோலினாய் - நெருப்பு பொறி உண்டாகும்படி வில்லை வளைத்தவனே; வம்புலாங் குழலாளை பாகம் அமர்ந்து - நீ மணம் வீசுகின்ற கூந்தலை உடைய இறைவியை பாகததில் வைத்துள்ளாய்; காவரிக் கோட்டினை கொம்பின் மேல் குவில் கூவ - காவிரி ஆற்றின் கரையின் கண்ணுள்ள சோலைகளின் மரக் கிளைகளில் மேலமர்ந்து குயில்கள் கூவ; மாமயிலாட - அழகிய மயில்கள் ஆடுகின்ற சிறப்பையுடைய; திருப்பாண்டி கொடு முடி நம்பனே - திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானே; உன்னை நான் மறக்கினும், சொல்லும் நா நமச்சிவாயவே - அடியேன் உன்னை மறந்தாலும், என்னுடைய நாவானது உமது திருப்பெயராகிய நமசிவாய என்ற ஐந்தெழுத்தை இடையறாது சொல்லும்.

## பொழிப்புரை

செம்பொன் போலும் சடையை உடையவனே, திரிபுரத்தில் தீ உண்டாகும் படி வில்லை வளைத்தவனே, மணம் வீசுகின்ற கூந்தலை உடைய இறைவியை ஒரு பாகத்தில் வைத்துள்ளாய் நீ காவிரி ஆற்றங்கரையின் கண்ணுள்ள சோலைகளின் கிளைகளின் மேல் அமர்ந்து குயில்கள் கூவ, அழகிய மயில்கள் ஆடுகின்ற திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற நம்பனே அடியேன் உன்னை மறந்தாலும், என்னுடைய நாவானது உனது திருப்பெயராகிய நமசிவாய என்பதனை இடையறாது சொல்லும்.

இதுவரை நீங்கள் கற்ற மூவர் தேவாரங்களையும் அவற்றை உள்ளடக்கிய பதிகங்களையும் நித்தமும் பக்தியுடன் ஓத வேண்டும். அதனால் எண்ணியது கிட்டும், நலம் சேரும்; நலிவு நீங்கும்; இன்னலும் இடரும் ஓடும்; நன்மை பெருகும்; வளம் செழிக்கும்.

## பாடச் சுருக்கம்

- சம்பந்தர் தேவாரப் பதிகங்கள் தொடக்கம் சேக்கிழார் பெருமானது பெரியபுராணம் வரை பாடப்பட்ட தோத்திரங்கள் பலவற்றின் தொகுப்பே பன்னிரு திருமுறைகளாகும்.
- திருமுறைகளுக்கு தமிழ் வேதம், தமிழ் மறை, திருமுறைத் தமிழ் என்னும் பெயர்கள் உண்டு.
- திருமுறைப் பாடல்களைப் பாட முன்பும் பாடிய பின்னும் திருச்சிற்றம்பலம் சொல்ல வேண்டும்.
- தேவாரம், திருவாசகம், திருபல்லாண்டு, திருத்தொண்டர் புராணம் (பெரியபுராணம்) என்பன பஞ்சபுராணம் எனப்படும்.

## பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. திருமுறைகளைத் தொகுத்தவர் தொகுப்பித்தவர் பெயர்களைக் குறிப்பிடுக.
2. திருச்சிற்றம்பலம் சொல்ல வேண்டியதன் காரணத்தை எழுதுக.
3. தேவாரம் என்பதன் பொருளை தருக.
4. அடங்கன் முறை என்பது யாது?
5. தேவாரங்களின் பல்வேறு சிறப்புக்களை எழுதுக.
6. தாண்டகவேந்தர் என அழைக்கப்படுபவர் யார்?

## ௐ செயற்பாடு

- இப்பாடத்தில் உள்ள மூவர் தேவாரங்களையும் மனனஞ் செய்து, அவற்றை வகுப்பறையில் ஓதுக. பொழிப்புரை சந்தர்ப்பம் என்பவற்றையும் கூறுக.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

# எட்டாந் திருமுறை

## மாணிக்கவாசகர் சுவாமிகள் திருவாசகம்

## ஆ. திருவாசகம்

சைவத் திருமுறைகள் பன்னிரெண்டினுள் எட்டாவது திருமுறையாக வைத்துப் போற்றப்படுபவை மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய திருவாசகமும், திருக்கோவையாரும் ஆகும். திருவாசகம் மாணிக்கவாசகர் சொல்ல இறைவன் எழுதிய சிறப்பினை உடையது. **'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்''** என்னும் சொற்றொடர் திருவாசகத்தின் சிறப்பினை உணர்த்தி நிற்கும். திருவாசகம் சொற்சுவை, பொருட்சுவை என்பன ஒருங்கமைந்த பக்தி நூலாகும்.

திருவாசகத்தில், சிவபுராணம் தொடக்கமாகக் கொண்டு அச்சோப்பதிகம் முடியும் வரை ஐம்பத்தொரு பகுதிகள் உள்ளன. திருவாசகத்தை அதற்குரிய இசையுடன் பாடவும், பாடக்கேட்கவும் கல்மனமும் கசிந்துருகபி பரவச நிலையடையும். திருவாசகப் பாடல்கள் மேற்கு நாட்டவராலும் போற்றப்படும் சிறப்புடையவை திருவாசகம் சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட பக்தி இலக்கியம். அதனைத் திருவாசகத்தின் தொடக்கமான சிவபுராணத்தின் முதல் வரியான ''நமச்சிவாய வாழ்க; நாதன் தாள் வாழ்க'' என்பதிலிருந்து புரிந்து கொள்ளலாம். திருவாசகத்தின் தொடக்கமான சிவபுராணத்தையும், முப்பதேழாவது பகுதியில் அடங்கும் பிடித்த பத்தில் ஒரு பாடலையும் இங்கு கற்போம். இவற்றைப் பாடசாலையில் மட்டுமல்லாது ஆலயம், வீடு, பொது நிகழ்வுகள் என்பவற்றிலும் பக்தியோடு பாடிப் பயனடைவோம்.

### சிவபுராணம்

சிவபுராணம் சமய குரவர்களுள் ஒருவரான மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப்பெற்றது. இது திருவாசகத்தின் முதற்பகுதியாக அமைவது. சிவபுராணம் இறைவன் உயிர்களை உய்விக்க இயற்றி வரும் திருவருட் செயல்முறைமையைக் கூறும்.

சிவபெருமான், மாணிக்கவாசக சுவாமிகளுக்குத் திருப்பெருந்துறையில், குருந்த மரத்தடியில் குருவாக எழுந்தருளி அருளுபதேசம் செய்தார். அவ்வேளை, ''சிதம்பரத்தில் அனவரதமும் ஆனந்தத் தாண்டவம் புரிகின்றோம்; அங்கு நீ வருக'' எனக் கூறி மறைந்தருளினார். மாணிக்கவாசகர், அருட்குரு தனக்கு வழங்கிய ஏனைய சிவனடியார்களுடன் இணைந்து தெய்வ பீடிகை அமைத்து அங்கு இறை வழிபாட்டில் ஈடுபட்டார். ஒருநாள், அவர் மனத்தில், ''இறைவன் தன்னை அடைந்தவர், அன்பில்லாதவராயினும், பாடிப் பணிக்கின்றவர்களுக்கு அருள் புரிவான்'' என்ற எண்ணம் திருவருளால் உண்டாயிற்று. உடனே, 'நமச்சிவாய' என்னும் திருவைந்தெழுத்தை முதலாக வைத்துச் சிவபுராணத்தைப் பாடினார். சிவபுராணம் இறைவனை நினைக்குந் தோறும் ஓதுவதற்கு உரியது. சிவபுராணத்தை, தினமும் காலையும் மாலையும் பாராயணம் செய்ய மனக்கவலை நீங்கி, மன அமைதி, நிம்மதி என்பன ஏற்படும். முன்பு செய்த தீவினை அகலும்; பிறவித்தளை நீங்கும்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

**திருப்பெருந்துறையில் அருளிய**

## சிவபுராணம்

சிவனது அநாதி முறைமையான பழமை
(கலிவெண்பா)

### திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க

1. நாதன் - தலைவன்
2. இமைப்பொழுது - நொடிப்பொழுது
3. கோகழி - திருப்பெருந்துறை
4. அண்ணிப்பான் - அணுகி அருள் வழங்கி நிற்பவன்
5. வேகம் - யான், எனது எனும் முனைப்பு; வெல்க - சிறக்க
6. பிஞ்ஞகன் - அழிப்பவன்; பெய்கழல்கள் - வீரக்கழலை அணிந்துள்ள திருவடிகள்
7. சேயோன் - தூரத்தில் உள்ளவன், தொலைவில் உள்ளவன், எட்டாதவன்
8. கரம்குவிவார் - கைகூப்பித் தொழும் அடியவர்
9. சிரம் குவிவார் - தலையாரக் கும்பிடும் அடியவர்; சீரோன் - செம்பொருள், சிவம்

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பன்யான்


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

| | | |
|---|---|---|
| 16. | ஆராத | - தெவிட்டாத |
| 17. | சிந்தை | - மனம் |
| 20. | ஓய | - நுணுக(குறுக),மோய எனப்பகுக்குமிடத்து நீங்க எனப் பொருள் கொள்க |
| 24. | எண்ணிறந்து | - எண்ணிக்கையைக் கடந்து |
| 25. | பொல்லா | - அழகில்லா; ஒன்று ஒரு சிறிதும் |
| 26. | பூடு | - செடிகள் முதலியன |
| 27. | விருகம் | - மிருகம், விலங்கு |

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவுஇறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

31. விமலன் - பாசங்கள் இல்லாதவன்
32. மெய்யே - மெய்ப்பொருளே
36. வெய்யாய் - வெம்மை மிகுந்தவனே (சூரியன்); தணியாய் - தண்மை மிகுந்தவனே (சந்திரன்); இயமானன் - உயிருக்கு உயிராய் நின்று இயக்குபவன்
39. எஞ்ஞானம் - எந்த வகையான அறிவும்
40. அகல்விக்கும் - நீக்கும்
43. தொழும்பு - அடிமை, திருத்தொண்டு
44. நாற்றத்தின் நேரியாய்- பூவில் மணம் போல் பொருந்தி இருப்பவனே
45. மாற்றம் மனம் கழிய - உரை உணர்வு நீங்க
46. கன்னல - கரும்பு
49. நிறங்களோரைந்து - ஐம்பூதங்களுக்குரிய ஐந்து நிறங்கள் அவை பொன்மை, வெண்மை, செம்மை, கருமை, புகைமை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

51. மாய இருள் - மாயை
55. மயங்க - கலங்க
56. விலங்கு - பிரபஞ்ச வாசனையில் இருந்து விலகிய
61 தயாய் - அருள்

63. தேசன் - ஆசிரியன்; தேன் ஆர் - இனிமை நிறைந்த
64. பாரிக்கும் - வளர்க்கும்
65 நேசம் - அன்பு
66. பேராது - சலிப்பற்று
67. ஆரா அமுது - உண்டு தெவிட்டாத அமுது
68. ஓராதார் - ஆராயாதவர்

அன்பருக்கு கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர் வார்தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

72. துன்னிருள் - செறிந்த இருள் (ஆணவ இருளின் உள்ளே தான் மறைக்கப்படாது, அதனுள்ளும் நிறைந்திருக்கும் தன்மை)
74. ஈர்த்து - இழுத்து (வலிய ஆட்கொண்டு)
75. கூர்த்த - கூரிய
76. நோக்கரிய நோக்கு - சுட்டுணர்வால் அறியப்படாத பொருள்
77. புணர்வு - அடைதல்
79. அத்தன் - அப்பன், தந்தை, தலைவன்
80. சொல்லாத - சொற்களினால் விபரித்துச் சொல்ல முடியாத
81. மாற்றம் ஆம் வையகத்தில் - மாற்றம் (பரிணாமம்) அடையும் உலகில்
82. தேற்றன் - தெள்ளியன்
83. ஊற்று - ஊற்றுப் போல் சுரக்கின்ற
84 விடக்கு உடம்பு - ஊனுடன்


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**திருச்சிற்றம்பலம்**

## பொழிப்புரை

## கடவுள் வாழ்த்தும் வணக்கமும்

### வாழ்க

1-5 வரிகள்

நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்து வாழ்க. தலைவன் திருவடியான திருவருட் சக்தி வாழ்க. கண்ணிமை கொட்டும் நேரமளவேயாயினும் என் மனத்தினிடத்திலிருந்து நீங்காதவன் திருப்பாதங்கள் வாழ்க. திருப்பெருந்துறையில் வலிந்து எனக்கு உபதேசஞ் செய்த குருமணியின் திருவடிகள் வாழ்க. ஆகமம் எனப்படும் மெய்நூலாகி நின்று இனிமை தருபவனுடைய திருவடிகள் வாழ்க. ஒரு முழுமுதலாய் பலவாய் விளங்கும் எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் இறைவன் திருவடிகள் வாழ்க.

### வெல்க

6-10 வரிகள்

என் மன வேகத்தைத் தடுத்துக் கெடுத்து என்னை அடியவனாக ஆட்கொண்டருளிய மன்னன் திருவடிகள் வெற்றிபெறுக. தலைக்கோலம் உடையவனான சிவபெருமானது; பிறப்பினை கருவேர் அறுக்கும் திருவருள் பெய்த வீரக்கழல் அணிந்த பாதங்கள் வெற்றி பெறுக. சைவத்தினின்றும் நீங்கி நின்ற புறதார்க்குத் தூரத்திலுள்ளவனான சிவனது அழகிய பாதங்கள் வெற்றி பெறுக. கைகளைக் கூப்பித் தொழுபவருடைய உள்ளம் அன்பினால் நினைந்து நினைந்து மகிழ்வதற்குக் காரணனாகிய இறைவனது திருப்பாதங்கள் சிறப்புப்பெறுக. தலை வணங்கித் தாழ்வாரை மேலோங்கச் செய்யும் சிறப்புடையவனது திருப்பாதங்கள் வெற்றி பெறுக.

### போற்றி

11- 16 வரிகள்

ஈசன் திருவடிகள் நம்மைப் பேணிக் காக்க. (வணக்கம்) என் அப்பனுடைய திருவடிகள் நம்மைப் பேணிக் காக்க (வணக்கம்). எல்லாத் தேசங்களிலும் எழுந்தருளியிருப்பவன் நம்மைப் பேணிக்காக்க (வணக்கம்). சிவனுடைய செம்மையான பாதங்கள் நம்மை பேணிக்காக்க (வணக்கம்). அன்பிலே நிலைத்து நின்ற திருவடிகள் நம்மைப் பேணி காக்க (வணக்கம்) மாயா மலத்தினால் உண்டாகும் பிறப்பினைக் கருவேரறுக்கும் மன்னனது திருவடிகள் நம்மைப் பேணிக் காக்க (வணக்கம்) சிறப்புப்

பொருந்திய திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள தேவனான சிவனது திருவடிகள் நம்மைப் பேணிக்காக்க (வணக்கம்) நுகர நுகரக் குறைவுபடாத பேரின்பமான முத்தியைக் கொடுத்தருளுகின்ற மலை போன்றவனான சிவனது திருவடிகள் நம்மைப் பேணிக்காக்க (வணக்கம்).

## செயற்படுபொருள்

17- 20 வரிகள்

சிவனாகிய அப்பெருமான் என் மனத்தை இடமாகக் கொண்டு நிலைபெற்று இருத்தலினாலே அவனுடைய திருவருளினாலே அவனுடைய திருபாதங்களை வணங்கி, மனம் மகிழ்ச்சி கொள்ளவும். முன்பு செய்த ஊழ்வினை முழுவதும் தேய்ந்தழியவும் (சிவனது பழைய வரலாற்றினை) சிவபுராணம் எனும் இப்பகுதியை யான் சொல் (லத் தொடங்கு) கிறேன்.

## அவையடக்கம்

21-25 வரிகள்

நெற்றியில் (அக்கினி) கண்ணையுடைய சிவபெருமான் தன்னுடைய இயல்பான கருணையான கண்களில் (அருள் நேர்க்கோடு) பார்த்து நினைவிற்கு எட்டாத அவனுடைய அழகு மிக்க திருபாதங்களை வணங்கித் துதித்து; வான் உலகம் முழுவதும் நிறைந்து, மண்ணுலகம் முழுவதும் நிறைந்து அவற்றிற்கு அப்பாலும் மிக்கதான, விளங்குகின்ற ஒளியை உடையவனே! எண்ணும் அளவைக் கடந்து, எல்லையைக் கடந்து விரிந்திருப்பவனே! உன்னுடைய பெருமை பொருந்திய சிறப்புக்களையெல்லாம் கொடிய தீவினையுடைய நான் புகழ்ந்து கூறும்முறை ஒன்றினையும் அறியாதவன்.

## தியானம் அடைக்கலம் புகல்

26-32 வரிகள்

எம்பெருமானே, புல்லாயும் , பூடாயும், புழுவாயும், மரமாகியும், பல்வேறு வகையான விலங்குகளாயும், பறவைகளாயும், பாம்புகளாயும், கற்களாயும், மனிதராயும், பேயாயும், கணங்களாயும், வலிய அசுரர்களாயும், முனிவராயும், தேவராயும் படைப்புக்குள் இயங்குதிணைப் நிலத்திணைப் (அசரம்) பொருள்களுள் எல்லாப் பிறப்புக்களிலும் பிறந்து இளைத்துப் போனேன். இன்று இப்பிறவியில் மெய்மையாக உன்னுடைய திருவடிகளைக் கண்டு விடுதலை (வீடு) பெற்றேன்.

33-35 வரிகள்

யான் பிழைத்துப் போகும் வண்ணம் என் மனத்தின்கண் ‘ஓம்’ என்ற வடிவுடன் அமைந்து நின்ற உண்மைப் பொருளே! குற்றமற்றவனே! காளையை வாகனமாக உடையவனே! வேதங்கள் நான்கும் ‘ஐயனே’ என்று ஓலமிட மேலோங்கியும் ஆழ்ந்தும் விரிந்தும் விளங்கும் நுட்பமானவனே!

36-38 வரிகள்

அன்பில்லாதவர்க்கு வெப்பமானவனே! அன்பரானவர்க்குக் குளிர்ச்சியானவனே! உயிருக்குள் அத்துவிதக் கலப்பால் உயிரானவனே! மாசற்றவனே பொய்ப்பொருள்கள் யாவும் விட்டு நீங்க எழுந்தருளி வந்து மெஞ்ஞானமாய் விளங்குகின்ற சத்திய ஒளியை வீசுகின்றவனே!

39-40 வரிகள்

எத்தகைய அறிவும் இல்லாத எனக்கும் இன்பம் அளிக்கின்ற பெருமானே! அஞ்ஞானத்தை அறவே ஒழித்துவிடும் நல்ல அறிவானவனே!

41-43 வரிகள்

படைக்கப்படுதலும் கால அளவும் முடிவும் இல்லாதவனே. எல்லா உலகங்களையும் படைப்பவனே, காப்பவனே, அழிப்பவனே, அருளை அளிப்பவனே, மறைப்பவனே என்னை உனக்குத் தொண்டு செய்யப் புகும்படி செய்பவனே.

44 - 48 வரிகள்

பூவின் மணம்போல அன்பர் உள்ளத்து இசைந்திருப்பவனே! (மறைந்து பிரிக்கமுடியாது) இயல்பாக விளங்கும் தன்மையுடையவனே, மெய் அன்பர் அல்லாதவர்களுக்கு மிகவும் எட்ட இருப்பவனே! மெய் அன்பர் ஆனவர்களுக்கு மிகவும் கிட்ட இருப்பவனே! சொல்லையும் மனத்தையுங் கடந்து நின்ற வேதப் பொருளானவனே; பசுவின் பாலோடு சர்க்கரையும் நெய்யும் கலந்தாற் போல மேலான அடியார்களின் எண்ணத்திலே இன்பம் ஊறும்படி நின்று, எடுத்த பிறவித் தளையை அறுக்கும் எங்களுடைய தலைவனாயுள்ளவனே.

49 - 61 வரிகள்

பொன்மை, வெண்மை, செம்மை, கருமை, புகைமை என்ற ஐந்து நிறங்களையும் முறையே கொண்ட நிலம், நீர், தீ, காற்று, விண் என்னும் ஐந்து பூதங்களைத் திருமேனியாக உடையவனே, யான், எனது எனும் செருக்ககலாத் தேவர்கள் துதிக்க அவர்கள் காணாதவாறு மறைந்திருப்பவனே, எங்கள் பெருமானே கொடிய வினையையுடையேனாகிய என்னையும், அறிவு மறைந்திடும்படி மூடிய மயக்குந் தன்மை வாய்ந்த ஆணவ இருளையும் புண்ணியம் (நல்வினை) பாவம் (தீவினை) என்னும் அறுத்தற்கு அரிய கயிற்றினால் கட்டி, வெளிப்புறத்தில் தோலால் போர்வையிட்டு உட்புறத்தில் எங்கும் புழுக்களும் மாசும் இருக்க மூடி, அழுக்குகளைச் சொரியும் ஒன்பது வாசல்களையுடைய குடிசையாகிய உடலை மயக்கும் படி புலன்களும் வஞ்சகச் செயல்களைச் செய்ய, மயக்கும்படி மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து புலன்களும் வஞ்சகச் செயல்களைச் செய்ய, மாறுபட்ட மனத்தினால் குற்றமற்றவனே, உன்னிடம் கலக்கும் விருப்பத்தோடு கலந்த அன்புடையவனாகிக் கரைந்து உள்ளம் உருகும் நற்குணச்செயல் இல்லாதவனான சிறியனாகிய எனக்கு, உன் இயற்கையான அருளை அளித்து, பூமியின் மேல் குருவாக வந்தருளி நீண்ட புகழ் கொண்ட பாதங்களைக் காண்பித்து, நாயினும் கீழ்ப்பட்டவனாய்க்கிடந்த அடியவனான எனக்குப் பெற்ற தாயினுஞ் சிறந்த கருணையை உடையவனாகிய மெய்மையானவனே.

62 - 69 வரிகள்

குற்றமற்ற ஒளி வீசும் மலர்ந்த மலரைப் போன்ற ஒளியை உடையவனே, பல தலங்களிலும் எழுந்தருளியிருப்பவனே, பிறவிப் பிணிக்கு இனிமை நிறைந்த மருந்தானவனே, சிவபுரத்தில் எழுந்தருளியிருப்பவனே! மும்மலப் பிடிப்பாம் பாசப்பற்றினை திருவைந்தெழுத்தை ஓதுவித்து, அதனை வேரோடு அறுத்த மேலோனே அன்பினால் அருளைச் செய்து மனத்திலுள்ள வஞ்சகத் தன்மைகள் கெட்டொழியும்படி வற்றாது ஓடிக்கொண்டிருக்கும் பெருமையான கருணையாகிய பெரிய ஆறு போன்றவனே, தெவிட்டாத அமுதம் போன்றவனே, எல்லையில்லாத பெருமையையுடையவனே, ஆராய்ந்து காணாதார் மனத்தின்கண் ஒளித்துக்கொண்டிருக்கும் ஒளியை உடையவனே, (கல்போன்ற மனத்தையுடைய) என்னையும் தண்ணீர்போலக் கரையும்படி உருக்கி என் உயிருக்கு உயிராய் நின்றவனே.

70-74 வரிகள்

இன்ப துன்பங்கள் இல்லாதவனே, அவற்றை உடையவனே; அன்பருக்கு அன்பனாக இருப்பவனே; எல்லாப் பொருள்களும் ஆகி, அவை அல்லாதன உருவாகியும் உள்ள ஒளி வடிவானனே; நெருங்கிச் செறிந்த இருள் வடிவினனே; எளிதிற் காணப்படாத பெருமையுடையவனே; மூலக்காரணமாக இருப்பவனே நடுவும் இருதியுமாகி இருப்பவனே ஆதி நடு அந்தம் என்பன இல்லாதவனே; என்னை வலிய வந்து இழுத்து ஆட்கொண்ட என் தந்தையாகிய பெருமானே;

75 - 38 வரிகள்

வேறுபட்ட மாறுபாட்டினைக் கொண்ட ஊன் முதலாகிய கட்டுக்களையுடைய (இந்தச் சிறிய வீடாகிய) உடம்பினுள் அடைப்பட்டுக் கிடக்க நான் பொறுக்கமாட்டேன், ''எம் ஐயனே சிவனே, ஓ'' என்று துதித்துப் புகழ்ந்து உன் முன் இருந்த பொய்மையை ஒழித்து மெய்யான உன்னைப் பற்றி நின்றவர்களான அடியவர்கள், திரும்பவும் இந்த உலகில் வந்து வினையினால் எடுக்கும் பிறவியை அடையாதவாறு, வஞ்சகத் தன்மை வாய்ந்த ஐம்புலன்களுக்கும் இடமான உடற் கட்டினை அகற்றி அவர்களை விடுவிக்க வல்லவனே; தில்லை என்னும் சிதம்பரத்தின் தென்திசையிலுள்ள பாண்டி நாட்டையுடையவனே; பரத்திலுள்ள பொன்னம்பலத்தில் கூத்தாடுபவனே; துன்பத்தைத் தரும் பிறவிக்கட்டினை அறுப்பவனே 'ஓ' என்று கூறி, உணர்த்துவதற்கு அரியவனைப் புகழ்ந்து சொல்லி;

## பயன்

94- 95 வரிகள்

அவனுடைய திருவடிகளின் கீழிருந்து சொல்லிய பாட்டாகிய இந்தச் சிவபுராணத்தின் பொருளை அறிந்து சொல்லுவோர்; (பிறர், பொருளை உணருமாறு சொல்லுவோர்) உலகிற் பலரும் புகழ்ந்து கூறவும் வணங்கவும் சிவத்தின் கண் செல்பவராயும், சிவபெருமானுடைய திருவடிக் கீழ் அமைந்திருக்கும் பேற்றையும் பெறுவர்.

**விளக்கம்**

சிவனது பழைய வரலாறு என்ற பொருள்படச் சிவபுராணம் என்றார். நமசிவாய என்பது தூல பஞ்சாட்சரம். நாதன் - ஆன்மநாதன் திருவாதவூரருக்குச் சிவபெருமான் திரு உத்தரகோச மங்கை, திருப்பெருந்துறை, சீர்காழி என்ற மூன்றிடங்களிலும் உபதேசித்தருளினார். மக்கள் இறைவன் பாதங்களை வணங்க அவர்களுக்கு அவன் அருள் வேண்டும் என்றார். அவனே ஆட்டுவிப்பார்; அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதை விளக்க.

**பாடல் 2 மாணிக்கவாசகர் சுவாமிகள் திருத்தோணிபுரத்தில் அருளிச் செய்த பிடித்த பத்து**

### முத்திக் கலப்புரைத்தல்

மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகத்தில் ''பிடித்த பத்து'' என்னும் பகுதி உள்ளது. இறைவனைச் சிக்கெனப்பிடித்தமையைக் கூறும் பத்துப் பாடல்களைக் கொண்டிருப்பதால் இப்பகுதி **பிடித்த பத்து** எனலாயிற்று. இறைவனை விடாது பற்றி நிற்றலே பிறவித் துன்பத்தை ஒழித்து மேலான முத்திப் பேற்றுக்கு வழியாகும்.

மாணிக்கவாசகர் பல திருத்தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருத்தோணிபுரத்துக்கு வந்தார்; அங்கு எழுந்தருளி உள்ள சிவபெருமானை

வழிபட்டார். அவ்வேளையில் தில்லை நடராஜப் பெருமானின் எடுத்த பொற்பாதம் நினைவுக்கு வர பத்து பாடல்கள் பாடியருளினார். ‘‘திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்’’ என்பதற்கு இப்பிடித்தபத்து ஓர் எடுத்துக்காட்டாகும்.

‘‘அத்தனே அண்டர் ....’’ என்ற பாடல் பிடித்த பத்தில் இடம்பெறும் எட்டாவது பாடலாகும். இதனை இங்கு கற்போம்.
பஞ்சபுராணம் பாடும்போது இப்பாடலையும் பக்தியுடன் பாடி, இறைவனின் அருளைப் பெறுவோம்.

**திருச்சிற்றம்பலம்**

அத்தனே அண்ட ரண்டமாய் நின்ற
ஆதியே யாதுமீ றில்லாச்
சித்தனே பக்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே யெல்லா வுயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை யல்லையாய் நிற்கும்
எத்தனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

**திருச்சிற்றம்பலம்**

**பதவுரை**

அத்தனே - எல்லா உயிர்க்கும் தந்தையே; அண்டர் அண்டமாய் நின்ற ஆதியே - தேவர்கள் வாழும் அண்டங்களுக்கும் நிலைக்களமாக நிற்கும் முதல்வனே; யாதும் ஈறு இல்லாச் சித்தனே - சிறிதும் அழிவில்லாத அறிவுடைப் (இயற்கை உணர்வும் முற்றுணர்வும் உள்ள) பொருளே; பக்தர் சிக்கெனப் பிடித்த செல்வமே - அடியவர்கள் உறுதியாகப் பிடித்துக் கொண்ட பேரிரக்கம் வாய்ந்த பேரருளாம் பெருஞ்செல்வமே; சிவபெருமானே - சிவனே; பித்தனே - ஆருயிர்களுக்கு அருள் செய்யும் விருப்புடையவனே;எல்லா உயிருமாய் எல்லா உயிர்களோடும் கலந்து அவையேயாயும்; தழைத்துப் பிழைத்து - உயிர்கள் தழைத்து நிற்பதற்கு வேண்டுவன புரிவதால் உடனாய்; அவை அல்லையாய் நிற்கும் எத்தனே பொருள் தன்மையால் அவற்றில் வேறுமாய் நிற்பவனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் - உன்னை சிக்கென உறுதியாகப் பற்றினேன்; இனி எங்கு எழுந்தருளுவது - இனி நீ, என்னை விட்டு எங்கு எழுந்தருள்வது?

**பொழிப்புரை**

எல்லா உயிர்க்கும் தந்தையே, தேவர்கள் வாழும் அண்டங்களுக்கு ஆதாரமாக நிற்கும் முதல்வனே, சிறிதும் அழிவில்லாத அறிவுடைப் (இயற்கையுணர்வும், முற்றுமுணர்வும் உள்ள) பொருளே! அடியவர்கள் உறுதியாகப் பிடித்துக் கொண்ட பேரிரக்கம் வாய்ந்த பேரருளாம் பெருஞ்செல்வமே, சிவபெருமானே, எல்லா உயிர்களோடும் கலப்பால் ஒன்றாய், அவை தழைத்து நிற்பதற்கு வேண்டுவன புரிவதால் உடனாய், பொருட்டன்மையால் அவற்றில் வேறுமாய் நிற்பவனே, உன்னைச் சிக்கென உறுதியாகப் பற்றினேன். இனி, நீ என்னை விட்டு எங்கு எழுந்தருள்வது?

## பாடச்சுருக்கம்

- மாணிக்கவாசகர் சுவாமிகள் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் பாடியருளினார். அவை எட்டாம் திருமுறைக்குள் அடங்கும்.
- பஞ்சபுராணம் பாடும் போது திருவாசகம் இரண்டாவதாய் பாடப்படும்.
- திருவாசகம் ஐம்பத்தொரு பகுதிகளைக் கொண்டது. அதில் முதலாவது பகுதி சிவபுராணம் ஆகும்.
- சிவபுராணத்தில் இறைவன் உயிர்களை உய்விக்க இயற்றி வரும் திருவருட் செயன்முறைமை கூறப்பட்டுள்ளது.
- சிவபுராணம் திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது.
- சிவபுராணத்தின் பொருளை உணர்ந்து பாடுவோர் இறைவன் திருவடிக்குகீழ் வீற்றிருப்பர் என அதன் பயன் குறிப்பிடுகின்றது.
- சிவபுராணத்தை வீடு, பாடசாலை, ஆலயம் முதலான இடங்களில் பாடி வழிபடுதல் அவசியம்.
- சிவபுராணத்தை வேண்டுந்தோறும் வேண்டிய இடத்தில் பாடலாம்.
- திருவாசகத்தில் உள்ள முப்பத்தேழாவது பகுதி பிடித்த பத்து ஆகும். இறைவனை சிக்கெனப்பிடித்தமையை கூறும் பத்து பாடல்களை கொண்டிருப்பதால் அப்பகுதி பிடித்த பத்து எனப்படும்.
- பிடித்த பத்து சீர்காழி என்ற இடத்தில் அருளி செய்யப்பட்டது.

## பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மாணிக்கவாசகர் சுவாமிகள் பாடி அருளிய நூல்களின் பெயர்களைத் தருக.
2. திருவாசகத்தின் சிறப்புகள் பற்றி சுருக்கமாக எழுதுக.
3. திருவாசகம் பாட வேண்டிய இடங்களை குறிப்பிடுக.
4. சிவபுராணம் என்பதன் பொருளை எழுதுக.
5. சிவபுராணத்தை ஓதுவதனால் ஏற்படும் பயன்களைத் தருக.
6. பிடித்த பத்து என அழைக்கப்படுவதற்கான காரணத்தை தருக.

## ௐ செயற்பாடு

- ♦ சிவபுராணத்தை மனனம் செய்து வெள்ளிக்கிழமை பிரார்த்தனையின் போது பக்தியுடன் பாடுக.
- ♦ ‘‘திருவாசகத்தின் சிறப்பு’’ என்ற தலைப்பில் வகுப்பறையில் உரை நிகழ்த்துக.
- ♦ ‘‘அத்தனே....’’ என்ற திருவாசகப் பாடலை பிழையின்றி எழுதுக.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

# ஒன்பதாம் திருமுறை

## இ. திருவிசைப்பா

திருவிசைப்பா என்னும் சொல் திரு + இசை + பா எனப் பிரிந்து திரு என்பது தெய்வத்தன்மை, அழகு எனவும், இசை - என்பது புகழ், பெருமை எனவும், பா - பாடல் எனவும் பொருள் தரும். அதாவது தெய்வத்தன்மை வாய்ந்த இசையுடன் பாடும் பாடல் அல்லது இறைவனின் புகழை இசையுடன் பாடும் பாடல் திருவிசைப்பா என்பதாகும். திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன ஒன்பதாந் திருமுறையுள் அடங்குவன. பஞ்சபுராணம் பாடும் போது திருவிசைப்பா மூன்றாவதாகப் பாடப்படும். திருவிசைப்பா அருளியோர் ஒன்பதின்மர். அவர்கள், திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்போராவர்.

''நையாத மனத்தினனை .....'' என்று தொடங்கும் திருவிசைப்பா, திரைலோக்கிய சுந்தரம் என்ற தலத்தின் மீது கருவூர்த்தேவரால் பாடப்பட்ட பதினொரு பாடல்களில் இரண்டாவது பாடலாகும். இறைவனின் புகழை இசையுடன் எடுத்துரைக்கும் அவரது பாடல்கள், கற்போர் மனதைக் கசிவிப்பதுடன் இறையன்பை வருவிக்கும் தன்மையையும் கொண்டன.

**தலம் - திரைலோக்கியசுந்தரம்** **பண் - காந்தாரம்**

**திருச்சிற்றம்பலம்**

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயா!நீ உலாப்போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுது அருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ? அருள்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே

**திருச்சிற்றம்பலம்**

**பதவுரை :**

நையாத மனத்தினனை நைவிப்பான் - உருகாத மனதை உடைய என்னை உருகச் செய்யும் பொருட்டு; இத்தெருவே - இந்த வீதி வழியே; ஐயா நீ உலாப் போந்த அன்று முதல் இன்று வரை - ஐயனே! நீ திருவுலாவாக எழுந்தருளிய அன்று தொடக்கம் இன்று வரை; கையாரத் தொழுது - கை கூப்பி மனமார வணங்கி; அருவி கண்ணாரச் சொரிந்தாலும் - கண்ணீர் மல்கி, உருகி நிற்கின்றேனே; செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே - கோட்டூர் என்னும் ஊரைச் சார்ந்துள்ள **திரைலோக்கிய சுந்தரம்** என்ற இடத்தில் விளங்கும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சுந்தரேசப் பெருமானே! எனக்கு அருள் செய்யமாட்டாயா?



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

**பொழிப்புரை:**

அன்புற்று மனம் உருகாத என்னை, (மனம்) உருகச் செய்யும் பொருட்டு, ஐயனே! நீ இவ்வீதியின் வழியே திருவுலா வந்தாய். அத்திருவுலாவைக் கண்ட அக்காலம் தொடக்கம் இன்று வரை, கை கூப்பி மனம் உருகி நிற்கின்றேன்; கண்ணீர் மல்கி உருகுகின்றேன். திருக்கோட்டுரைச் (கோடை) சார்ந்த **திரைலோக்கிய சுந்தரம்** என்ற இடத்தில் விளங்கும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சுந்தரேசப் பெருமானே! அடியேனுக்கு அருள் செய்வாயாக.

## பாடச்சுருக்கம்

- திருவிசைப்பா என்பது, தெய்வத் தன்மை வாய்ந்த, இசையுடன் பாடும்.
- பாடல் அல்லது இறைவனின் புகழை இசையுடன் பாடும் பாடல் என்பதாகும்.
- திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையுள் அடங்கும்.
- திருவிசைப்பா திருமாளிகைத்தேவர் முதலான ஒன்பதின்மரால் பாடப்பட்டது.
- 'நையாத மனத்தினனை.....' என்று தொடங்கும் திருவிசைப்பா கருவூர்த்தேவரால், திரைலோக்கிய சுந்தரம் என்ற தலத்தின் மீது பாடப்பட்டதாகும்.
- பஞ்சபுராணம் பாடும்போது, திருவிசைப்பா மூன்றாவதாகப் பாடப்படும்.

## பயிற்சிகள்

**அ பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. திருவிசைப்பா என்பதன் பொருளைத் தருக.
2. திருவிசைப்பா பாடியோர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
3. பன்னிரு திருமுறைகளுள், திருவிசைப்பா அடங்கும் திருமுறையைக் குறிப்பிடுக.
4. திருவிசைப்பாவின் சிறப்புகளை எழுதுக.
5. ''நையாத மனத்தினனை...'' என்ற திருவிசைப்பா யாரால், எத்தலத்தின் மீது பாடப்பட்டது?

## ௐ • செயற்பாடு

- ♦ ''நையாத மனத்தினனை...'' என்ற திருவிசைப்பாவை மனனம் செய்து, இசையுடன் ஓதிக்காட்டுக. அதன் பொழிப்புரையை எழுதுக.
- ♦ திருவிசைப்பா பாடிய ஆசிரியர்களுள் ஒருவரான கருவூர்த்தேவர் பற்றி, சுருக்கமாகக் குறிப்பு எழுதுக.
- ♦ தரப்பட்ட திருவிசைப்பா பாடல் தவிர்த்து, மேலும் நான்கு திருவிசைப்பா பாடல்களை மனனம் செய்து, காலைக்கூட்டத்தில் ஓதுக.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

# ஒன்பதாம் திருமுறை

## ஈ. திருப்பல்லாண்டு

திருப்பல்லாண்டு பாடியவர் சேந்தனார் ஆவார். அவர் ‘‘இறைவனைப் பல ஆண்டுகள் வாழ்க’’ என்று தம் அன்பின் மிகுதியாலும் நன்றிப் பெருக்காலும் வாழ்த்துகின்றார். இப்பாடல்கள் ‘‘பல்லாண்டு வாழ்க’’ என்று வாழ்த்துதலினால், இப்பாடல் தொகுப்பினை **திருப்பல்லாண்டு** என்னும் பெயரால் போற்றினர்.

இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் சேந்தனார். அவர் நாள்தோறும் சிவனடியார்களுக்கு உணவளித்து, எஞ்சியதையே உண்டு வந்தார். அவரது சிவ பக்தியை உலகினருக்கு உணர்த்த இறைவன் விரும்பினார். ஒருமுறை சிதம்பரத் தேர்த் திருவிழா நாளிலே, தேர் திருவீதியிற் சிறிது தூரம் சென்று, பின் ஓடாது நின்றது. சிவனடியார் அனைவரும் அதனை இழுக்கத் தம்மாலான முயற்சிகளைச் செய்தும் முடியவில்லை. அப்பொழுது, ‘‘சேந்தா, நீ பல்லாண்டு பாடினால் தேர் ஓடும்’’ என்று ஓர் அசரீரி கேட்டது. சிவனடியார் கூட்டத்தோடு தேரின் வடம் பிடித்திருந்த சேந்தனார், திருவருளின் திறத்தை எண்ணி வியந்தார். ‘‘மன்னுகதில்லை வளர்க நம் பக்தர்கள்…’’ என்று தொடங்கி, திருப்பல்லாண்டு பாடினார். அவர் பாடியதும் தேர் அசைந்து, மெல்ல நகர்ந்து இருப்பிடத்துக்கு வந்தது. அப்போதுதான் சேந்தனார் யார் என்பதை எல்லோரும் உணர்ந்தனர்; அவரது இறை பக்தியின் சிறப்பைப் போற்றினர்.

திருப்பல்லாண்டு ஒன்பதாந் திருமுறையுள் அடங்கும். பஞ்சபுராணம் பாடும்போது, திருப்பல்லாண்டு நான்காவதாகப் பாடப்படும். ‘‘சொல்லாண்ட சுருதிப் பொருள்…’’ என்ற திருப்பல்லாண்டை இங்கு கற்போம். அதனை மனனம் செய்து, ஆலயங்களிலும் பாடசாலை காலைக் கூட்டத்திலும் பாடுவோம்.

**தலம் - தில்லை (கோயில்)** **பண் - பஞ்சமம்**

**திருச்சிற்றம்பலம்**

சொல்லாண் டசுரு திப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

**திருச்சிற்றம்பலம்**

**பதவுரை :**

சொல்லாண்ட சுருதிப் பொருள் - புகழ் பொருந்திய நால் வேதப் பொருளை; சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர் - நுணுகி ஆராய்ந்த பரிசுத்தமான மனத்தை உடைய தொண்டர் திருக் கூட்டத்துள்ளவர்களே; சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர் சிறு நெறி சேராமே - சில ஆண்டுகளில் அழிவுறும் சிறு தேவர்களை (தெய்வங்களை)



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

மெய்ப்பொருள் எனக்கருதி பொய் நெறியில் செல்லாமல்; வில்லாண்ட கனகத் திரள்மேரு விடங்கன் - மாமேருவை வில்லாகக் கொண்டவனும்; விடைப்பாகன் இடபத்தை வாகனமாகக் கொண்டவனும்; பல்லாண்டு என்னும் பதங்கடந் தானுக்கே - பல ஆண்டுகள் என்ற காலத்தைக் கடந்த, என்றுமுள்ளவனுமான எங்கள் சிவபெருமானுக்கே; பல்லாண்டு கூறுதுமே ''பல்லாண்டு வாழ்க'' எனக் கூறி வாழ்த்துவோம்.

**பொழிவுரை :**

வேத மெய்ம் மொழியை ஆராய்ந்து, அது சிவபெருமானே எனத் துணிந்து ஏற்றுக் கொண்ட தூய மனமுடைய திருத்தொண்டர்களே; நீங்கள் சில ஆண்டுகளில் அழிந்து விடுகின்ற சிறு தேவர்களை மெய்ப்பொருள் எனக் கருதிப் பொய் நெறியிற் செல்லாமல், மாமேருமலையை வில்லாக வளைத்த அழகனும் இடப வாகனனும் பல ஆண்டுகள் என்ற காலத்தைக் கடந்த என்றும் உள்ளவனுமான எங்கள் சிவபெருமானுக்கே பல்லாண்டு கூறி வாழ்த்துங்கள்.

## பாடச்சுருக்கம்

- திருப்பல்லாண்டு என்பது ''இறைவனைப் பல ஆண்டுகள் வாழ்க'' என வாழ்த்திப் பாடும் பாடல்களாகும்.
- திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறையுள் அடங்கும்.
- திருப்பல்லாண்டு சிதம்பரத்தில் சேந்தனாரால் பாடப்பட்டது.
- பஞ்சபுராணம் பாடும்போது திருப்பல்லாண்டு நான்காவதாகப் பாடப்படும்.

## பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. திருப்பல்லாண்டு என்பதன் பொருளைத் தருக.
2. திருப்பல்லாண்டு பாடியவரின் பெயரை எழுதுக.
3. திருப்பல்லாண்டு பாடப்பட்ட சந்தர்ப்பத்தினைக் குறிப்பிடுக.
4. பன்னிரு திருமுறைகளுள் திருப்பல்லாண்டு எத்தனையாம் திருமுறையில் அடங்கும் என்பதைக் குறிப்பிடுக.
5. சேந்தனாரிடம் காணப்பட்ட நற்பண்புகளைப் பட்டியற்படுத்துக.

## ௐ • செயற்பாடு

- ''சொல்லாண்டசுருதிப்பொருள் ...'' என்ற திருப்பல்லாண்டை மனனம் செய்து, இசையுடன் ஓதிக்காட்டுக.
- தரப்பட்ட திருப்பல்லாண்டின் பொழிப்புரையை எழுதுக.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## பத்தாம் திருமுறை

# உ. திருமந்திரம்

திருமந்திரம் திருமூல நாயனாரால் பாடப்பட்டது. இது ‘‘தமிழ் ஆகமம்’’ எனப் போற்றப்படும். திருமந்திரம் ஒன்பது தந்திரங்களையும் மூவாயிரம் பாடல்களையும் கொண்டது. இந்நூல் இனிய சொற்களால், ஆழமான சித்தாந்த சிந்தனைகளைப் படிப்பவர் மனதில் பதித்துவிடும் முறையில் அமைந்துள்ளது. திருமந்திரம் சைவசித்தாந்தக் கருத்துக்கள் பொதிந்த சாத்திர நூலாகவும், தோத்திர நூலாகவும் மதிக்கப்படுகின்றது.

திருமந்திரத்தில் இடம்பெறும் ‘‘யாவர்க்குமாம்...’’ என்று தொடங்கும் திருமந்திரப் பாடலை இங்கு கற்போம். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் அன்றாட வாழ்வினை எவ்வாறு அறவழியில் அமைக்கலாம் என்பதற்கு இப்பாடல் வழிகாட்டும். அத்துடன் அறஞ்செய்வது அரிய செயலன்று; எல்லோராலும் செய்யக் கூடியது; யாவருக்கும் எளிதானது. அறஞ்செய்வதற்குக் காலம் வேண்டியதில்லை; இடம் வேண்டியதில்லை; எல்லோரும் எப்போதும் எவ்விடத்திலும் செய்யலாம் என்பவை இப்பாடலில் கூறப்படுகின்றது.

**திருச்சிற்றம்பலம்**

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு விற்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

**திருச்சிற்றம்பலம்**

**பதவுரை:**

யாவர்க்கும் ஆம் - யாவருக்கும் இயலக் கூடியது; இறைவற்கு ஒரு பச்சிலை யாவர்க்குமாம்- வில்வம் முதலிய அர்ச்சனைக்குரிய இலைகளை) இட்டு வணங்குதல் எல்லோருக்கும் இயலக் கூடியது; பசுவிற்கு ஒரு வாயுறை யாவர்க்கும் ஆம் - பசுவுக்கு ஒரு பிடி பசும் புல் (ஒரு வாயளவு பசும்புல்) கொடுத்தல் எல்லோருக்கும் இயலக்கூடியது; உண்ணும்போது ஒரு கைப்பிடி யாவர்க்கும் ஆம் - பசி என்று வந்த எவருக்கும் உண்ணும் உணவில் ஒரு பிடி (கவளம்) ஈதல் எல்லோருக்கும் இயலுமானது; பிறர்க்கு இன்னுரை யாவர்க்கும் ஆம் - பிறருடன் இனிமையாகப் பேசுதல் யாவர்க்கும் நன்மையேயாகும்.

**பொழிப்புரை**

எல்லா உயிருக்கும் உயிர்க்குயிராய் உள்ள இறைவனுக்கு ஒரு பச்சிலையை இட்டாவது வணங்குங்கள். எல்லோருக்கும் பால் கொடுக்கும் பசுவுக்கு ஒரு வாயளவு பசும் புல்லையாவது கொடுங்கள். பசி என்று வந்த எவருக்கும், நீங்கள் உண்ணும் உணவில் ஒரு கவளம் சோறாவது கொடுங்கள். பிறருடன் பேசும் போது இனிமையாக, இனிய சொற்களைப் பயன்படுத்தி அன்பாகப் பேசுங்கள்; அவை யாவருக்குமே நன்மையைப் பயக்கும். அவை எல்லோருக்கும் இயலக்கூடிய இலகுவான, எளிமையான அறச் செயல்களாகும்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

**விளக்கவுரை**

''யாவர்க்கு மாம் இறை.... இன்னுரைதானே'' என்ற திருமந்திரம் குறிப்பிடும் நியதிகளைக் கடைப்பிடித்து, ஒவ்வொருவரும் வாழ்ந்தால் தருமம் பெருகும்; உலகம் உய்யும்.

## பாடச்சுருக்கம்

- திருமந்திரம் திருமூலர் என்பவரால் பாடப்பட்டது.
- இது பத்தாந் திருமுறையில் அடங்கும்
- திருமந்திரம் 'தமிழ் வேதம்' எனவும் போற்றப்படும்.
- ''யாவர்க்குமாம்...'' என்ற திருமந்திரப் பாடலில் சிறப்பான அறச் செயல்கள் கூறப்பட்டுள்ளன.

## பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பன்னிரு திருமுறைகளுள், திருமந்திரம் எத்தனையாம் திருமுறையில் அடங்கும் என்பதைக் குறிப்பிடுக.
2. திருமந்திரம் பாடியவரின் பெயரை எழுதுக.
3. திருமந்திரத்தின் சிறப்புகளைக் குறிப்பிடுக.

## செயற்பாடு

- தரப்பட்ட திருமந்திரப் பாடலை மனனம் செய்து பக்தியுடன் ஓதிக் காட்டுக.
- 'யாவர்க்குமாம்...' என்ற திருமந்திரப் பாடலில் பொழிப்புரையை எழுதி வாசிக்க.
- நீங்கள் இலகுவாகச் செய்யக் கூடிய அறச் செயல்களைப் பட்டியற்படுத்துக.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

# பதினோராம் திருமுறை

## மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை

பன்னிரு சைவத்திருமுறைகளில் பதினோராம் திருமுறையிலே திருவாலவாயுடையார் தொடக்கம் நம்பியாண்டார் நம்பி வரையிலான பன்னிருவர் பாடிய நாற்பது பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. இவர்களில் கபிலதேவநாயனார் என்னும் பெரியார் பாடிய அருமையான பிரபந்தம் மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலை' என்னும் இலக்கியம் ஆகும். கபிலர் என்ற பெயரில் வாழ்ந்த சமயச் சிந்தனையாளர்களில் இருவர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களில் ஒருவர் ''சாங்கிய காரிகை'' என்ற நூலின் அடிப்படையில் சாங்கியம் என்னும் தரிசனத்தை விளக்கியவர் ஆவார். மற்றவர் அடியார் என்ற பொருள் தரும் 'தேவநாயனார் ஆவார். இவர்கள் இருவரும் காலத்தாலும் கொள்கையாலும் வேறுபட்டவர்கள்.

மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை என்ற பிரபந்தம் விநாயகப் பெருமானைப் பற்றிய பக்தி இலக்கியமாகும். மூத்தநாயனார். மூத்த பிள்ளையார் என்ற தொடர்கள் சிவபிரானின் மூத்த பிள்ளை விநாயகர் என்ற கருத்தைத் தருகின்றன.

இருபது பாடல்கள் கொண்ட மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை என்னும் நூலில் உள்ள விநாயக பக்தி ததும்பும் பாடல் '' திருவாக்கும் செய்கருமம் ...'' எனத் தொடங்கும் வெண்பா ஆகும்.

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கைகூப்புவர்தங் கை

திருச்சிற்றம்பலம்

### பொழிப்பு

மெய்யன்புள்ள மண்ணுலக மக்களுக்கு விநாயகப் பெருமான் செல்வப்பேறு நற்காரி சித்தி, வாக்குவன்மைச் சிறப்பு, தெய்வீக வடிவழகு என்பவற்றை ஈயும் கருணையை நினைந்து, விண்ணுலகத் தேவர்களும் அப்பெருமானைக் கைகூப்பி வணங்குவர்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## பாடச்சுருக்கம்

- கபிலர் என்பவரால் பாடப்பட்டதே மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை
- இப்பிரபந்தம் விநாயகப் பெருமானைப் பற்றிய பக்தி இலக்கியமாகும்.
- இப்பிரபந்தம் இருபது பாடல்களை கொண்டமைந்துள்ளது.

## பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை எத்தனையாம் திருமுறையில் அடங்கியுள்ளது?
2. மூத்த நாயனார் என்ற சொல் யாரைக் குறிக்கிறது?
3. விநாயகப் பெருமானை வழிபடுவதனால் நாம் பெறும் பயன்கள் எவை?

## ௐ செயற்பாடு

- ♦ தரப்பட்ட பிரபந்தத்தை மனனம் செய்து இசையுடன் பாடுக.
- ♦ விநாயகப் பெருமானின் சிறப்புகளை பட்டியலிடுக.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

# பன்னிரண்டாந் திருமுறை

## ஊ. பெரிய புராணம்

பெரிய புராணம் திருத்தொண்டர் புராணம் எனவும் போற்றப்படும். பெரியபுராணத்தை இயற்றியவர் சேக்கிழார். தொண்டை நாட்டிலுள்ள குன்றத்தூரில் பிறந்தவர். அவர் இரண்டாம் குலோதுங்கச் சோழனுக்கு முதன் மந்திரியாக இருந்தவர். பெரிய புராணம் அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய வரலாற்றைக் கூறுகின்றது. பெரிய புராணத்தை எழுதுவதற்கு, ''உலகெல்லாம்...'' என அடியெடுத்துக் கொடுத்தவர் சிவபெருமான். செயற்கரிய செய்கை செய்த சிவனடியார்களின் வரலாற்றை விளக்கிக் கூறும் நூல் என்பதால் இந்நூல் பெரிய புராணம் என வழங்கப்பட்டது.

பெரிய புராணம் சைவத் திருமுறைகளுள் பன்னிரெண்டாந் திருமுறையாகப் போற்றப்படுவது. பஞ்சபுராணம் ஓதும் போது இது ஐந்தாவதாக ஓதப்படும். பெரிய புராணம் 13 சருக்கங்களைக் கொண்டது. அதில் ஐந்தாவது சருக்கமான திருநின்ற சருக்கத்தில் காரைக்காலம்மையார் புராணம் இடம் பெறுகின்றது. ''இறவாத இன்ப அன்பு...'' என்று தொடங்கும் பெரிய புராணப் பாடல், காரைக்காலம்மையார் புராணத்தில் இடம்பெறும் அறுபதாவது பாடலாகும். அதனை இங்கு கற்போம்.

**திருச்சிற்றம்பலம்**

இறவாத வின்ப வன்பு வேண்டிப்பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டும்நான்
மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின்கீழ்
இருக்க வென்றார்.

**திருச்சிற்றம்பலம்**

**பதவுரை:**

இறவாத இன்ப அன்பு வேண்டி- எக்காலத்தும் அழிவில்லாத இன்பந்தரும் கருணையைத் தருமாறு பிரார்த்தித்து; பின் வேண்டுகின்றார் - மீண்டும் வேண்டுதல் செய்கின்றார்; பிறவாமை வேண்டும் - இவ்வுலகில் பிறப்பில்லாத நிலையினைத் தருமாறு வேண்டுகின்றார்; மீண்டும் பிறப்புண்டேல் - மீண்டும் பிறப்பு இருந்தால்; உன்னை என்றும் மறவாமை வேண்டும் - சிவபெருமானே உன்னை எப்பொழுதும் மறவாத மனம் வேண்டும்; இன்னும் வேண்டும் - மேற்கூறியவற்றுடன் மேலும் வேண்டுகின்றார். நான் மகிழ்ந்து பாட - நான் உனது புகழை மகிழ்ச்சியுடன் பாட; அறவா! நீ ஆடும் போது உன் அடியின் கீழ் நான் மகிழ்ந்து பாடி இருக்க என்றார் - ''அறக்கடலான சிவபெருமானே! நீ ஆனந்த நடனம் ஆடும் போது மகிழ்ச்சியுடன் பாடிக் கொண்டு உன் திருவடிக்கீழ் இருக்கும் பேறு ஆகும்'' என வேண்டினார்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

**பொழிப்புரை:**

எக்காலத்தும் கெடுதல் இல்லாத இன்ப அன்பை வேண்டிக் கொண்டு, பின்னும் வேண்டுபவராய் ‘‘இனி நான் பிறவாதிருக்கும் வரம் வேண்டும். மீண்டும் பிறவி உளதாயின், உன்னை என்றும் மறவாதிருக்கும் வரம் வேண்டும். அறக்கடவுளே! நான் மேலும் வேண்டுவது, ‘‘தேவரீர் அருட்கூத்து ஆடும்போது மகிழ்ச்சியுடன் பாடிக் கொண்டு, உனது திருவடியின் கீழ் இருக்கும் பேறு ஆகும்’’ என உரைத்தார்.

## பாடச்சுருக்கம்

- திருத்தொண்டர் புராணம், பெரிய புராணம் என்னும் பெயராலும் வழங்கப்படுகின்றது. சேக்கிழாரால் பாடப்பட்டது.
- பெரிய புராணம், சைவத் திருமுறைகளுள் பன்னிரெண்டாந் திருமுறையாகப் போற்றப்படுகின்றது.
- பெரிய புராணத்தில் உள்ள திருநின்ற சருக்கத்தில் காரைக்காலம்மையார் புராணம் இடம் பெற்றுள்ளது.

## பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பெரிய புராணம் பாடியவரின் பெயரை எழுதுக.
2. பெரிய புராணத்தின் மறுபெயரைத் தருக.
3. பன்னிரு திருமுறைகளுள் பெரியபுராணம் எத்தனையாம் திருமுறையில் அடங்கும் என்பதைக் குறிப்பிடுக.
4. பெரியபுராணத்தின் பொருள் மரபினை எழுதுக.
5. பெரிய புராணம் என்பதன் பொருள் யாது?

## ௐ. செயற்பாடு

- ‘‘இறவாத இன்ப அன்பு வேண்டி ............’’ என்ற பெரிய புராணத்தை இசையுடனும் பக்தியுடனும் ஓதிக் காட்டுக.
- தரப்பட்ட பெரிய புராணத்தின் பொழிப்புரையை எழுதுக.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக